


# “கருப்பு–சிவப்பு என்பது திராவிட நிறம்!”

**கழக இளைஞர் அணி நடத்திய ‘தி.மு.க. 75 அறிவுத் திருவிழா’ நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக நடைபெற்ற ‘இருவண்ணக் கொடிக்கு வயது 75’ கருத்தரங்கத்தின் ஒன்பதாவது அமர்வுக்குத் தலைமை வகித்த கழகக் கொள்கை பரப்புச்செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. அவர்கள் ஆற்றிய உரை :**

“பொதுவாக 60 ஆண்டுகளைக் கடந்தால், மணிவிழா கொண்டாடுவார்கள். மணிவிழாவை பெற்றோருக்குக் கொண்டாடுவது அவர்களுடைய பிள்ளைகள். 75-வது ஆண்டு விழாவைப் பவள விழாவாகக் கொண்டாடக்கூடியவர்கள் பேரன்மார்கள். இன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் இந்தப் பவள விழாவை, பேரனாக இருந்து நம்முடைய கழக இளைஞர் அணிச் செயலாளர், இளந்தலைவர் அவர்கள் முன்னெடுத் திருக்கிறார். இந்த அறிவுத்திருவிழா ‘இருவண்ணக் கொடிக்கு வயது 75’ என்று இரண்டு நாட்கள் ஒரு மாபெரும் கருத்தரங்கு 10 அமர்வுகளைக் கொண்டு நடத்தப்படுகிறது.

‘இருவண்ணக் கொடிக்கு வயது 75’ என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது என்ன இருவண்ணம்? அது வெறும் வண்ணம் அல்ல, அது கொள்கையின் நிறம், கோட்பாட்டின் நிறம், தன்மான உணர்வின் நிறம், பகுத்தறிவுச் சிந்தனையின் நிறம், சுயமரியாதை யின் நிறம், சமூக நீதியின் நிறம், சமத்துவத்தின் நிறம். மொத்தத்தில் திராவிடத்தின் நிறம்.

1982-இல் இளைஞர் அணிக்கான அடையாள அட்டையை வழங்குவதற்காகத் தொடங்கப்பட்ட அந்த விழாவில் கலைஞர் பேசும்போது, ‘நான் 1980-லேயே இளைஞர் அணி குறித்து ஒரு கடிதம் எழுதியிருக்கிறேன்’ என்று சொல்லி, அதை அந்த உரையில் விவரித்தார்.

**உடன்பிறப்புக்கு கடிதம்**

‘என்னரும், என் அருமை இளம் உடன்பிறப்பே! அன்புத் தம்பி! உன்னை தி.மு.க. இளைஞர் அணியின் உறுப்பினர் என்பதை அறிவிக்கும் அடையாள அட்டையில் இதோ, இந்தக் கடிதத்தில் இணைத்திருக்கும் படத்தைப் பார்த்தாயா? இந்த இடத்தில் இடம்பெற்றிருக்கக்கூடிய அந்தப் படம்தான் தி.மு.க.வின் இளைஞர் அணியின் உறுப்பினர் அட்டையில் இடம்பெற்றிருக்கும் படம்.

ஏறுநடை இளைஞன், ஏந்தியிருப்பான் கையில் இருவண்ணக்கொடி.

‘எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே’ என்று முழங்குவான்’. ‘வெண்கொடுமை சாக்காட்டில் விளையாடும் தோள் எங்கள் வெற்றி தோள்கள்’ என்று வீரப் பண் பாடுவான். ’கிளம்பிற்றுகாண் தமிழ்ச் சிங்கக் கூட்டம்’ என்று பீடுநடை போட்டு, பெருமித நோக்குடனே முழங்கிடுவான். உலகைக் கவ்வும் இருட்டை விரட்டும் ஒளிக்கதிர் அவன். பெரியாரின் பேரப்பிள்ளை, அண்ணாவின் தம்பிகளுக்குத் தம்பி. பெருநெருப்பாம் சாதி, மத பேதங்களை ஓர் நொடிக்குள் அணைக்கத் தாவும் தீயணைக்கும் படைவீரன். மூடநம்பிக்கையால் முடைநாற்றம் எடுத்துக் கிடக்கும் சமுதாயத் தெருக்களை சுத்தப்படுத்தி, பகுத்தறிவுத் தூய்மை மணம் பரப்புகின்ற பாட்டாளிப் பெருமகன்.

தம் கையில் கிடைத்தவற்றைச் சுருட்டிக்கொண்டு, ஏழையின் முதுகெலும்பை ஆட்சிக் கோலாக்கி, ஆதிக்கம் செலுத்துகின்ற முதலாளித்துவக்



## சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ.
### கழகக் கொள்கை பரப்புச் செயலாளர்



கூட்டத்தின் ஆர்ப்பாட்டங்களைக் கடந்த கால வரலாறாக ஆக்கி காட்டுகின்ற சமதர்மச் சுடர்விளக்கு.

ஆம், அந்த இளைஞன் விழி திறந்தான், அண்ணன் வழி நடந்தான், அன்னை மொழியைக் காத்தான், பழி துடைத்தான், இப்படி சரித்திரம் படைக்க இதோ எழுந்தான்’ என்று அந்த கடிதத்தின் வாயிலாய் இருவண்ணக் கொடியை ஏந்தி நிற்கக்கூடிய இளைஞனைப் பற்றி விவரித்திருக்கக்கூடிய அந்தக் கடிதத்தின் வழியே, இருவண்ணக் கொடியை ஏற்றிய அந்தக் காலத்தைப் பற்றி விவரித்திருக்கிறார்.

**இருவண்ணக்கொடியின் பெருமை**

நான் கொஞ்சம் யோசித்துப் பார்க்கிறேன்.

கொடியேற்றம் எப்போது நடக்கும், ஏன் நடக்கும்?. ஒன்றை வீழ்த்தினால் வருகின்ற வெற்றியின் அடையாளமாகத்தான் கொடியேற்றம் நடக்கும். இங்கே ஏற்றப்பட்டிருக்கக்கூடிய அந்த இருவண்ணக் கொடி, 75 வயதைக் கடந்திருக்கக்கூடிய இந்த இருவண்ணக் கொடி எதை வீழ்த்தியது?

வருணாசிரமத்தை, மூடநம்பிக்கையை, தீண்டாமையை, சாதியக் கொடுமையை, பெண் அடிமைத்தனத்தை, அந்நிய மொழி ஆதிக்கத்தை, மதவெறியை என்று இத்தனையையும் வீழ்த்தியதனால் ஏற்றப்பட்டிருக்கக்கூடியது இந்தக் கொடி.

ஏற்றியதனால் கிடைத்திருக்கக்கூடிய வெற்றிகள் எவை? இந்த இருவண்ணக் கொடி ஏற ஏற, ஒவ்வொரு ஆண்டும் ஏறி அதற்கு வயது 75 என்பதை இன்றைக்கு அடைந்திருக்கிறது என்று சொன்னால், அதில் கிடைத்திருக்கக்கூடிய வெற்றி எது?

**விண்ணைத்தொடும்**

சமூக நீதி, சமத்துவம், பகுத்தறிவுச் சிந்தனை, சுயமரியாதை உணர்வு, மதச்சார்பற்ற தன்மை, பெண்களுக்கான கல்வி உரிமை, சமூகப் பொருளாதார உரிமை என்று அத்தனையும் பெற்றிருக்கிறதே, இதைத்தான் இந்த வெற்றியாக நாம் முழக்கமிடுகிறோம்.

இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிகழ்த்திக் கொண்டிருக்கக்கூடிய சாதனைகளைப் பாருங்கள். அது ‘புதுமைப்பெண்’ திட்டமாக இருக்கட்டும், ‘தமிழ்ப்புதல்வன்’ திட்டமாக இருக்கட்டும், ‘நான் முதல்வன்’ திட்டமாக இருக்கட்டும், கலைஞரின் மகளிர் உரிமைத் திட்டமாக இருக்கட்டும், விடியல் பயணத் திட்டமாக இருக்கட்டும் என்று எண்ணில் அடங்காத திட்டங்கள் இன்றைக்கு உயர்ந்துகொண்டே வருகின்றன என்று சொன்னால், தமிழ்நாட்டினுடைய எழுச்சி உயர்ந்து கொண்டே இருக்கிறது என்று பொருள். இருவண்ணக்கொடி நூறாண்டு காலத்தைக் கடக்கும்போது, அது விண்ணைத் தொட்டிருக்கும்.

**தலைவர் ஏற்றிய கொடி**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இந்த இருவண்ணக் கொடியைத் தமிழ்நாடு முழுவதும் ஏற்றியிருக்கிறார். நம்முடைய தமிழ்நாட்டின் முதலமைச்சர், திராவிட நாயகன் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் ஏற்றிய கொடி களினுடைய எண்ணிக்கை ஏராளம். தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய இருவண்ணக் கொடியில் பாதியை கலைஞர் ஏற்றினார் என்றால், மீதியை முத்தமிழறிஞர் கலைஞரின் மகன் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஏற்றினார். அப்படி உயர்த்தி ஏற்றிய அந்த இருவண்ணக் கொடியை, இன்றைக்கு அடுத்த தலைமுறைக்கு வழங்கியிருக்கக்கூடிய கரங்கள்தான், அதை ஏற்றக்கூடிய கரங்களாய் இருக்கக்கூடிய கரம்தான், அதற்குச் சொந்தக்காரர்தான் உதயநிதி ஸ்டாலின் என்ற இளந்தலைவர்.

**தொடரும் பகுத்தறிவு!**

தந்தை பெரியார் தொடங்கிய அந்தப் பயணம் நம்முடைய பேரறிஞர் அண்ணா வழியில், முத்தமிழறிஞர் கலைஞர் வழியில், இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் தொடர்ந்து கொண்டிருக்கிறார் என்று ‘பாதை மாறா பகுத்தறிவுப் பயணம்’ என்ற தலைப்பிலே நம்முடைய டாக்டர் எழிலன் அவர்கள் பேசுகிற பொழுது சொன்னார். அதற்கு உதாரணமாக, வைக்கம் போராட்டத்தைக் குறிப்பிட்டார். ஆலய நுழைவுக்கு உரிமை இல்லாதவர்களுக்காகப் போராடிய அந்த காலம் உண்டு என்றால், இன்றைக்கு ஆலயத்துக்குள் நுழைந்து அர்ச்சகராகவே பணி புரியலாம் என்ற பயணம் தொடர்கிறது. இப்படித்தான் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம் பாதை மாறாமல் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

வர்ணாசிரம ஆதிக்கத்தைப் பெரியார் உடைத்தெறிந்தார் என்று சொன்னால், ஆதிக்கம் ஆளுநர் வடிவில் வந்தாலும் அதை எதிர்க்க வேண்டும். ‘ஆட்டுக்குத் தாடியெதற்கு? நாட்டுக்கு ஆளுநர் எதற்கு?’ என்றார் பேரறிஞர் அண்ணா. ஆளுநர் மட்டுமே கொடியேற்றக்கூடிய வாய்ப்பு என்றால், ‘மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சருக்குக் கொடியேற்றுகின்ற உரிமை எங்கே?’ என்று கேட்டு, தமிழ்நாட்டில் அல்ல, இந்தியாவில் உள்ள அத்தனை மாநில முதலமைச்சர்களும் கொடியேற்றுகின்ற உரிமையைப் பெற்றுத் தந்தார் கலைஞர்.

ஆளுநரே ஆனாலும் சரி, சட்டதிட்டங்களுக்கு உட்பட்டுத்தான் நடக்க வேண்டும் என்று சட்டப்பேரவையிலேயே பாடம் நடத்தியவர் நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், திராவிட நாயகர் அவர்கள். எனவே, எந்த நிலையிலும் எந்நாளும் ஆதிக்கத்திற்கு அடிபணியாத ஆலமரம் திராவிட முன்னேற்றக் கழகம் என்று சொல்லி, முக்கியம் வாய்ந்த இருவர் பேசியுள்ள இந்த இரண்டு தலைப்புகளும், ‘மானமும் அறிவும் மனிதருக்கு அழகு’ என்ற தந்தை பெரியாரின் கருத்தை வலியுறுத்துவதாக அமைந்திருக்கின்றன.” ●

## அனைவரும் போற்றும் அறிவுத் திருவிழா!

**அறிவுத் திருவிழாவின் ஒரு பகுதியாக நடைபெற்ற ‘முற்போக்கு புத்தகக்காட்சி’யில் ஒவ்வொரு பதிப்பகத்திலும் அதிகம் விற்பனையான நூல்கள் :**




பேசாமொழி பதிப்பகம் :
**சினிமா எனும் கலை**

மணற்கேணி பதிப்பகம் :
**கலைஞர் காலம்**

நிமிர்வோம் பதிப்பகம் :
**ஆரிய மாடலா, திராவிட மாடலா?**

கருப்புப் பிரதிகள் :
**திரையிலும் உதித்த சூரியன்**

கீழைக்காற்று பதிப்பகம் :
**சிறந்த கம்யூனிஸ்ட் ஆவது எப்படி?**